உ

சிவமயம்.

புத்துப்பட்டு க்ஷேத்திரத்தில்

கொலுவமர்ந்திருக்கும்

ஸ்ரீ ஹரிஹரபுத்திர மஞ்சினீஸ்வரஸ்வாமி

# பஜனை கீர்த்தனைகள்

இஃது,

மதுரையமாநகரம்,

கவிராஜ கந்தசாமிபிள்ளை

அவர்களாலியற்றப்பட்டு

தேவந்தல் கிராமம்

முனிசாமிநாயகர் குமாரராகிய

வரதப்பநாயகரின்

பொருளுதவியால்

சென்னை

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

24 MAR 19
MADRAS



உ

சிவமயம்.

ஸ்ரீஹரிஹரபுத்திர

மஞ்சினீஸ்வரஸ்வாமிபேரில் பாடிய

# ஞானானந்தபஜனை கீர்த்தனை.

## கணேசர் கீர்த்தனை.

(வரமருள்வாணி என்ற மெட்டு)

பல்லவி.

கணேஸநாதனே கமலபாதனே
காத்தருள்வாயையனே காருண்யதேவனே. (க)

வேதவிக்னேஸா விளங்கும்ப்ரகாசா
பாதாரவிந்தமருள்வாய் பக்த்தர்க்கருள்நேசா. (க)

புத்துப்பட்டினில் பூசுரர்கள்பூஜிக்கும்
புனிதகல்யாணகுணனே புகழ்பிரக்யாதனே. (க)

வித்தைக்கருள்வோனே விண்ணோர்கள் பூஜிதனே
சத்துசித்தானந்தமயமே சரணடைந்தோமே. (க)

ஞானதீபமே வானோர்ஜோதியே
த்யானமெந்தனுக்கருள்வாய் கணேஸமயமே. (க)

சந்தரம்வரதன் நம்பும்தேவனே
கந்தசாமிக்கருள் தயாள கருணாகரனே. (க)

## சுப்பிரமணியர் கீர்த்தனை.

(மதனிகா இனியானென்செய்வேன் மெட்டு.)

பல்லவி.

சுப்ரமண்யா யுந்தனை நம்பினே னையனே (சுப்ர)

அநுபல்லவி.

எப்புவியிலுந்தோற்றும் ஏகலோகநாதனே
எழைக்கருள் தயாளா எந்தைசிவ (சு)

சரணங்கள்.

சத்துசித்தானந்த சரவணபவஞான
சாமிசண்முகாயுன்னை சரணடைந்தேன் (சு)

அசுரர்சம்மாரா அமரர்க்குபகாரா
அண்டினோர்க்கார்க்கும் தண்டபாணி (சு)

சித்தர்கட்காதாரா ஜீவகாருண்யனே
பக்தர்கள்பூஜிதனே பாதுகாத்தருள் (சு)

எந்தனுளும்வரதன் சிந்தனைசெய்திடும்
கந்தசாமிக்கருள் காருண்யனே (சு)

## வீரமாகாளர் கீர்த்தனை.

(ஐயா வருகலாமோ என்ற மெட்டு.)

### பல்லவி.

வேண்டினேனே ஐயா வீரமாகாளனே வீரப்பிரக்யாதனே

### அநுபல்லவி.

ஆண்டவனென்றுனை பணிந்தேனே-சுவாமி
ஆதிவேதாந்தா நம்பினேனே
அருள் வோனே என்முன் வருவோனே
ஐயா அன்பர் தொழுதிடும் சின்மயானந்தனே (வே)

### சரணங்கள்.

சூரபத்மன் துன்பஞ்சகியாமல் இந்த்ராணி
சீர்காழியில்வந்து குயிலாக-மிக
துயராலே மனம் அயர்வாலே உன்னை
துதித்திடகாவல் புரிந்தர க்ஷித்தவா (வே)

சந்தரம்வாதனை காப்போனே
கந்தசாமிக்கருள் குணவானே-காத்
தருள்வாயே அருள் புரிவாயே-சுவாமி
கமலமாமுகனே நின் பதமென் மனதிருத்தி (வே)

## ஹரி ஹர புத்திரனாகிய ஐயனார் கீர்த்தனை.

(ஆண்டவனை துதிசெய்ய விரும்பு மெட்டு.)

பல்லவி.

ஹரி ஹர புத்ரனே—அமரே சனுக்கருள் (ஹரி)

அநுபல்லவி.

தாரணியோர்மகிழ் புத்தூப்பட்டுநகர்
தன்னிலமர்ந்திடும் சின்மயானந்தனே (ஹ)

சரணங்கள்.

அறுபதினாயிரம் ரிஷிகள்வளர்த்திட
அன்பர்கள்யாவரும் துதித்துபணிந்திட
சுரர்கள்சிம்மாசனத் தமர்த்திபூஜித்திட
சூரரையெல்லாம் அடித்துதுரத்திய (ஹ)

அசுரரையெல்லாம் அறுமுகன்வதைத்திட
அமரலோகத்தின் அரசுநிலைத்திட
தமதருளால்புத்தூப் பட்டுசெழித்திட
தயாபரமஞ்சிவீஸ் வரனருள்புரிந்திட (ஹ)

எந்நாளும்வரதன் உந்தனைமறவாமல்
எற்றி தினந்துதித்து போற்றிடவருகுவாய்
சந்திரசூரியர் சாற்றுந்தயாபரா
சதுர்மறையோர்புகழ் பதந்தொழுதேனையா (ஹ)

# மஞ்சினீஸ்வரர் கீர்த்தனை.

(தேவாதிதேவ னென்றனை மெட்டு.)

## பல்லவி.

ஆதி வேதாந்த ஜோதியே ஈஸ்வரனே
மஞ்சினீஸ்வரனே
ஜெகதீஸ்வரனே. (ஆதி)

## சரணங்கள்.

பாதிமதியணியும் பரமதயாளனே
பக்தர்க்கருள்புரி நித்யவைபோகனே
ஜோதிசுடரொளியே நீதிப்ரகாசனே
அருள்வாயே-வரந்
தருவாயே. (ஆதி)

புத்துப்பட்டுநகரில் நித்யனுயமர்ந்து
பக்தர்க்கருள்புரியும் நித்தியனந்தா
இத்தரியெங்களுக் குற்றதுயரொழிப்பாய்
ஈஸ்வரனே-மஞ்சி
னீஸ்வரனே. (ஆதி)

## மஹாவிஷ்ணு கீர்த்தனை.

(கடைக்கண்ணால் பாரையனே-என்ற மெட்டு.)

### பல்லவி.

அருள்புரிவாயையனே ஆதி மூலமே (அ)

### அநுபல்லவி.

தரணியிலுனையல்லால் சாமியெனக்கார்துணை (அ)

### சரணங்கள்.

அமரரனைவரையும் அஞ்சலென்றுதரித்து
அசுராதியரையெல்லாம் அடியோடேவேரறுத்து
தமதருளால் ஐய னையும் சிருஷ்டித்து
தரணியோர்க்குபகாரஞ் செய்ததிருமாலே (அ)

புத்துபட்டுநகரில் பூசுரர்பணிந்திட
புகழும்வரதனுன்னை துதித்துமகிழ்ந்திட
சித்தம்வைத்தன்பர்கள் சிவனுர்மகிழ்ந்திட
ஸ்ரீ அவதாரஞ்செய்து சூரனைஜெயித்திட (அ)

## ஆஞ்சநேயர் கீர்த்தனை.

(சித்திவிநாயகர் தானிதோவந்தார் என்ற மெட்டு.)

### பல்லவி.

ஆஞ்சநேயா யெமக்கருள்செய்குவாயே அசுரரைவென்ற
ஆஞ்சநேயா யெமக்கருள்செய்குவாயே. (ஆஞ்)

சரணங்கள்.

வாஞ்சையுடனுன்னை துதித்தபேர்கட்கு
வருத்தமில்லாமல் மகிழ்வுடன்காத்திட்ட
ஆஞ்சனாதேவிக்கு மைந்தனாய்வந்திட்ட
ஐயனேயுந்தனை சிந்தனைசெய்தோமே (ஆ)

சுக்ரீபனுக்கு துணையாயமர்ந்தவா
ஸ்ரீராமனுக்கு சகாயமாய்வந்தவா
திக்கநிவாரணஞ் செய்துமகிழ்ந்தவா
தாரதண்டிகைக்கு தைரியஞ்சொன்னவா (ஆ)

தரணியோர்துதிக்கும் சாமிஅநுமந்தா
தர்மகுணத்தினர்க் காதாரமானவா
வரதன்றினந்தோறும் பூஜிக்குமையனே
வானோர்கட்காதார மாகும் அநுமந்தா (ஆ)

பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அசுராதியரைவெல்ல கையில் கதைதாங்கிய
ஆஞ்சனாதேவி பாலா.

அநுபல்லவி.

பசிக்குப்பழம்புசிக்க பருதியைபற்றியதால்
பலவரங்களைப்பெற்ற பலவந்தா அனுமந்தா (அ)

சரணங்கள்.

சுக்ரீபன் துணையாக துன்பத்தையொழித்திட
சுந்தர ஸ்ரீராமன் துணையாகவந்திட

மிக்கபலவானான வாலியைவதைத்திட
மேன்மையாய்சீதையை தேடவேநாடிட (அ)

அன்பாயசோகவனம் அடைந்துசீதையைதேடி
அசுராதியரையெல்லாம் அன்றேகொல்லவேநாடி
வன்மையாய்லங்கையை கனலால்கொளுத்திவாடி
வல்லாரக்கர்களை கொல்லவகைதேடிய (அ)

தசமுகனால்வந்த ஜம்புமாலி அக்ஷயன்
தைரியஇந்த்ரஜித்தன் தனுசேந்திவந்தவுடன்
புஜபலபராக்ரமாய் போர்செய்தராக்ஷதரை
புகழுடனேஜெயித்த மகிழும்அனுமந்தா (அ)

சூடாமணியைராமர் சுகமுடன்காண்பதற்கு
சுந்தரானந்தமாய் சொற்சோர்விலாமலே
வாடாமல்ராக்ஷதரை வல்லமையாய்ஜெயித்து
மதியில்லாராவணனை அதிவிரைவாய்ஜெயித்த (அ)

புத்தப்பட்டுகரின் பணிதர்கள்பூஜிக்க
புகழுடன்விளங்கிய மகிழான அனுமந்தா
நித்தியனாகிய நிதிமிகும்மாருதி
நீடூழிகாலமுன்னை நினைத்துதேடுறேனையா (அ)

வரதன்தினம்பூஜிக்கும் வீரஅனுமந்தா
வணங்கிதுதித்தேனையா மகிழுடனெந்தனுக்கு
வரந்தந்தாளையனே வானவர்பூஜிக்கும்
வல்லமையில்மிகுந்த செல்வஅனுமந்தானே (அ)

ஸ்ரீ ஹரிஹரபுத்திர மஞ்சினீஸ்வர ஸ்வாமி
ஞானானந்த பஜனை கீர்த்தனை
சம்பூரணம்.

# பொற்கலைபூரணியம்மன் கீர்த்தனை.

காம்போதி-ஆதிதாளம்-பல்லவி.

பொற்கலைபூரணி யம்மன் திருவடியை
போற்றிச்செய்து பணிவோமே (பொற்கலை)

அநுபல்லவி.

நற்குணபக்தருக்கு நாளும் துணைசெய்து
நம்பும் அன்பர்களுக்கு துன்பம்வராமல்காக்கும் (பொ)

சர. ஐயனார்மகிழ்ந்திடும் அம்மனிருவர்கட்கும்
அனுதின மும்பூஜை அனபாகசெய்திடும்
தூய்யகுணமுள்ள மெய்மைவிளங்கிடும்
துணைவன்வரதப்பன் துதித்துபணிந்திடும் (பொ)

விருத்தம்

திருவளருவாவியும் சோலைசூழ்ந்திடுந்திவ்ய
சிங்காரலங்காரமாய்
சிவனடியர்துதிபரவு தேவர்தல் நகரினில்
சீரோங்கி வாழ்ந்திருக்கும
பெருமைசேர் முனிசாமி நாயகர் புத்திரர்
பெட்புறும் வடிவமைந்து
பேசுபுகழ் சாந்தமும் தயாளமும் கீர்த்தியும்
பெருமைபுடனே யமர்ந்த
தருமகுண வாதப்ப நாயக ரன்பனும்
தயாளகுண சின்னசாமி
தவராமல்பூஜிக்கும் மஞ்சினீஸ்வாருக்கு
தகுந்தநற் சுபதின'த்தில்'
அருமைசேர்பூஜை நைவேத்தியஞ்செய்தினிதாய்
அபிஷேகமும் புரிந்து
அனுதினந் துதிப்போர்க்குவறுமைநோய்பிணியிலா
ஐயனாருள் புரிவரே.

76225
0.008.

உ

சிவமயம்.

பக்தர்கள் வேண்டுகோளுக் கிணங்கி
விழுப்புரம் - நந்திதேவர் மாதவயோகம்டாலயம்
க. சி. முருகேசமுதலியாரவர்கள்பாடிய
புத்துப்பட்டு ஐயனார்

# பல்சந்தத் துவாதச மாலை.

---

## காப்பு

குறள் வெண் செந்துறை.

புத்துப்பட்டினிற் புகழ்பெறுமையனார்
பொற்பைப்புகலருள் புரிவனேங்கரனே.

## நூல்.

பூவுலகோரென்றும் புகழ்புத்துப்பட்டிலொளிர்
நாவலனே செண்டவிர்கை நாயகனே-ஆவலொடு
முன்னடிவந்துற்றோ முலகுபுகழ் நன்கெமக்கு
மன்னவருள் செய்யமகிழ். (க)

கட்டளைக் கலித்துறை.

மகிழ்ச்செழிற்பூரணைபுட் கலைமார்தமை மன்னியவா
சகந்தினமேத்து நற்புத்துப்பட் டெல்லையிற்றங்கியவா [கே
உகர்துணைப்போற்றிசெய் தெங்குலத்தெய்வமா வேத்தெமக்
இசம்பரமெய்து லைமீயசீமனத்தெண்ணையனே. (உ)

## கட்டளைக் கலிப்பா.

ஏதமுற்றுமகற்றியெழின்மிகு மெண்ணமெய்தவும்
வந்தனை யேத்தினேனுங்
காதல்கூர்ந்து பணிந்திடு மெங்களைக்கருணையோ
டினிக்காப்பதுன் பாரமே
சீதமார்தரும் பூம் புனலார்வயல் சேரும் புத்துப்பட்
டென்றொளிர் மாநகர்
சாதமாகவினைத்துறை தாதையேசகம்புரக்க
வரம்பெறு சாத்தனே. (௨)

## கலி விருத்தம்.

சாத்தனென்பெயர் தாங்கியெஞ்சந்ததி
காத்தளிக்கவார் காரணகர்த்தனே
நேர்த்தியாம்புத்துப் பட்டெனுநீணகர்
தோத்திரஞ்செயத் துன்னுவீர்தோழரே. (௪)

## அறுசீரடி விருத்தம்.

துன்னும்பல்கணைஞ் சூழவுந்தோகைமார் நடமாடவு
முன்னவும்மரிதாம்பரி யூர்ந்துநம்மிட ரோட்டவும்
மன்னும்புத்துப்பட்டென் பதிவாழுமையனையேத்துவீர்
இன்னல்கொண்டுழல்மாந்தரே யின்பமார் சுகமெய்தவே. ()

## வஞ்சி விருத்தம்.

வேட்டையாடவெள்ளையானைமீது செல்லுமெய்யனை
நாட்டில்வாழுமாந்தர்புத்துப் பட்டோனென்றுநவிலுவர்

வீட்டைநாடியோகுசெய்யு மேன்மையாளர்தம்மொழித்
கூட்டமோடுசேர்ந்தோனென்று குதுகலிப்புக்கொள்வரே.

### ஆசிரியப்பா.

கொள்ளுங்குணமே குறியெனக்கொண்டுக்
தள்ளும்விடயத் தவறுகணித்து
மெக்காலத்தினு மின்புறவிருப்போர்
தக்கோரன்னவர் சார்பினைக்கொளாது.
மண்பெண்பொன்களின் மாறிமிக்குழலும்
உண்மையினெஞ்சமே யோதுவன்கேண்மோ
மற்றவையுன்னை மயக்கிடும்வஞ்சம்
தெற்றனவறிந்துநீ சேருறவெனுவையேல்
புத்துப்பட்டினிற் பொற்புறவிருந்த
சுத்தருக்கெல்லாந் துணைசெயுமையன்
சிவலோகத்தினிற் செலுத்துவனதனு
லுவமையில்சித்தி யுற்றினிப்பாயே. (எ)

### சந்த விருத்தம்.

பாயும்பரிமீதேவரப் பக்கம்பலவீரர்
நாயும்புலிகரியாதியு நண்ணைடுச்சியில்
காயுங்கிளைத்தீவர்த்திகள் கதிர்போலொளிகவின
நேயம்புத்துப்பட்டிலுறு நிமலன்வருவானே. (அ)

### அறுசீரடி விருத்தம்

வானனாவிய கானகம்வாய்ந்த புத்துப்பட்டினெல்லை
மானமார்கடல்கீழ்க்கரை மற்றைமூன்றுதிசையினும்

...ர்சேர்புதுவைகுகன் றிவ்வியமயிலம்மாக்
...ணலாகுமிதிலரிகான் சுதன்மனுங்காணவே, (கூ)

## அறுசீர்த் தாழிசை

காவ்வாளாருகினிற் கைகுவித்துநிற்கவுந்
தேவிபூரணைவலந்திகழும் புட்கலையிட
மாவிபோலவமாவுமையன் புத்துப்பட்டினில்
மேவியன்பர்க்கருளுவான் விண்ணுமண்ணுமேத்தவே

## கலித் தாழிசை.

எத்துவீர்மாவிளக் கெண்ணிலாதாவினெய்
வார்த்துநீரப்பமா வர்க்கரும்பொங்கலும்
நேர்த்தியாகத்தரி னெஞ்சுவக்தும்மெணம்
பூர்த்தியாக்கித்தரும் புத்துப்பட்டையனே. (கக)

## எழுசீரடி விருத்தம்.

ஐயனார்புத்துப் பட்டினிலுறைந் தன்பருக் கருள்வமொன
செய்யர்தாமினநீர் கெய்பவொடுஞ் சிங்கேடாளுந் திருவார்
வையமேற்குல தெய்வமாமிகழுத்துநாமவன் மாண்பினே
யுய்யுமாறு வழுத்தவோர்த பெப்பவிப்பூ வுலகமே. (கஉ)

முற்றும்.

176225

## நூற்பயன்.

எக்குலத்தெய்வமாக வெழிலுறும் புத்துப்பட்டிற்
தங்கியவையன்மீது சாற்றுமித் தமிழையோதும்
புங்கவர்க்கெல்லா நன்கும்பொருந்து மாறவனைவேண்டிச்
செங்கைகள் கூப்பிநாளுஞ் சிந்தனைசெய்குவேனே.

புத்துப்பட்டில்வாழ் பூரணைகேள்வனை
சித்தத்தெண்ணுவோர் தீவினை தீருமீ
தத்தத்தில்லுறுமா மலகக்கனி
மத்தப்புன்மனனே மதியேற்பையே.

## வாழி.

வாழ்கபுத்துப்பட்டினில் வைகுமையனூர்புகழ்
வாழ்கவன்றன் றேவிமார்மற்றிந்நூலென் சந்ததி
வாழ்கவேதமாகமம் வைதிகநன்மாநெறி
வாழ்கபூதியக்கமா மணிகள்வானம் வையமே.

புத்துப்பட்டு ஐயனார்
பல்சந்தத் துவாதசமாலை சம்பூரணம்